ATR 53

சண்டேசுவரநாயனார்

# குருபூசை மலர்

பவ வருடம் — தை உத்தரம்



வெளியீடு:

அகில இலங்கைத் திருமுறை மன்றம்

யாழ்ப்பாணம்.

1995

1995.

## சண்டேசுவரநாயனார்

# குருபூசை மலர்

பவ வருடம் — தை உத்தரம்



வெளியீடு:

## அகில இலங்கைத் திருமுறை மன்றம்

யாழ்ப்பாணம்.

1995

உ

# பதிப்புரை

பன்னிரு திருமுறைகள் பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுப்பன 'பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே' என்பது. திருஞானசம்பந்த சுவாமிகளின் அருள் வாக்கு. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதும் அன்பர் கூட்டம் நிறைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டது, அகில இலங்கைத் திருமுறை மன்றம். அதற்கான முயற்சிகளை மன்றம் அவ்வப்போது எடுத்து வருகிறது.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்பது சைவசித்தாந்தம். அயரா அன்பின் அரன்கழல் செல்லும் அன்பர்க்குச் சிவபூசைப் பலனைக் கொடுத்து வாழ்விப்பவர் சண்டேசுவரர். பன்னிருதிருமுறைகளும் சண்டேசுவரரைப் போற்றுகின்றன. அத்திருப்பாடல்கள் எல்லோரும் அறிய வேண்டியன, எல்லோரும் பாராயணம் செய்ய வேண்டியன, விசேடமாகப் போற்றுதற்குரியன. அப்பாடல்களால் மலருகின்றது இக்குருபூசை மலர் 'அருச்சனை பாட்டே' ஆதலின் ஆதரவு கிடைக்குமென நம்புகிறோம். இம்மலரைச் சண்டேசுவரர் விழாக்களிலும் குருபூசையிலும் அன்பர்கள் ஓதிப் பலன் கொள்வார்களாக.

**சு. ஏகாம்பரநாதன்**
செயலாளர்
யாழ்ப்பாணம். அகில இலங்கைத் திருமுறை மன்றம்

## கதைச் சுருக்கம்

திருச்சேய்ஞலூர் அந்தணர் குலத்தில் எச்சதத்தன் எனும் ஒருவர் இருந்தார். அவருக்கு விசாரசன்மர் என்று ஒரு மகன் அவதரித்தார். விசாரசன்மர் வேதங்களை நன்கு பயின்றார் அவ்வூரில் பசுக்களை மேய்ப்பவன் ஒருநாள் பசுவொன்றை அடித்ததைக் கண்டபொழுது அதற்காக இரங்கி, பசு மகிமை யைப் போற்றும் நோக்கில் அன்றுமுதல் விசாரசன்மர் தாமே ஆனிரைகளை மேய்க்கலானார். பசுக்களும் உபத்திரவமில்லா மல் மேய்ந்து தொழுவத்து இவரைக் கண்ட மாத்திரத்தே முலை சொரியும் நிலையை அடைந்தன. வீணிற் சொரியும் பாலைப் பயன்படுத்தும் பொருட்டுச் சிவபூசை செய்யும் எண்ணம் இவருக்கு உருவாயிற்று, மண்ணியாற்றின் தென் கரையில், ஆத்தி மரத்தடியில் மணலினாற் சிவலிங்கம் அமைத் துப் பசு தாமாகச் சொரியும் பாலைக்கொண்டு திருமஞ்சனம் ஆட்டி வந்தார். இவர் இங்ஙனம் செய்துவருவதை அறிந்த இவர் தந்தை ஒருநாள் இவர் செய்கையை நேரிற் கண்டார். கோபமுற்றுப் பாற்குடங்களைக் காலால் இடறினார். அதனைக் கண்ணுற்ற விசாரசன்மர் கோலொன்றை எடுத்துத் தந்தை மேல் வீச அது மழுவாக மாறித் தந்தையின் கால்களை வெட் டிற்று. இறைவன் உடனே எழுந்தருளித் தமது திருமுடிக் கொன்றை மாலையைச் சூட்டி, நாம் சூடும் மலர்களும், உடுக்கும் ஆடைகளும், உண்ட பரிகலமும் உனக்கே யாகுக என்று கூறிச் சண்டீசப் பதமும் தந்தார். பின்னர் நாயனார் சண்டீசுவர பதத்தை அடைந்து இன்புற்றார்.

# சண்டேசுர நாயனார்

## திருத்தொண்டத்தொகை

திருச்சிற்றம்பலம்

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

## திருத்தொண்டர் புராண சாரம்

வேதமலி சேய்ஞலூர் எச்ச தத்தன்
விளங்கியசேய் மறைபயிலும் விசார சன்மர்
கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே
கொண்டுநிரை மண்ணியின்தென் கரையின் நீழல்
தாதகியின் மணலிலிங்கத்து ஆன்பால் ஆட்டத்
தாதைபொறாது அவையிடறும் தாள்கள் மாளக்
காதிமலர்த் தாமம்உயர் நாமம் உண்ட
கலம்மகனாம் பதம்அருளாற் கைக்கொண் டாரே.

உ
சிவமயம்

சண்டேஸ்வரரைப் போற்றும்

# சைவத் தெய்வத் திருமுறைத் திரட்டு

## ஆளுடைய பிள்ளையார்
முதலாந் திருமுறை

### திருச்சேய்ஞலூர்

பண் – பழந்தக்கராகம் இராகம்: ஆரபி

திருச்சிற்றம்பலம்

பீரடைந்த பால தாட்டப் பேணா தவன்றாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்ததென்னே?
சீரடைந்த கோயின் மல்கு சேய்ஞலூர் மேயவனே.

### திருக்கோளிலி

பண் – பழந்தக்கராகம்

வந்தமண லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.

### திருவூறல்

பண் – வியாழக்குறிஞ்சி இராகம்: சௌராஷ்டிரம்

எண்டிசை யோர்மகிழ வெழின்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தா னவன் றாழுமிடம் வினவிற்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர் பொய்கைகள் சூழ்ந்துநஞ்சை
யுண்டபி ரானமருந் திரு வூறலை யுள்குதுமே.

## இரண்டாந் திருமுறை

### திருப்புள்ளிருக்குவேளூர்

பண் – சீகாமரம் இராகம்: நாதநாமக்கிரியை

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.

## மூன்றாந் திருமுறை

### திருப்பாசுரம்

பண் – கௌசிகம் இராகம்: பைரவி

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த கால்லை யறவெட்டிட முக்கண் மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே.

### திருவேட்டக்குடி

பண் – பஞ்சமம் இராகம்: ஆகிரி

தோத்திரமா மணலிலிங்கந் தொடங்கியவா னிரையின்பால்
பாத்திரமா வாட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தமல்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே.

### திருவாலவாய் – திருவியமகம்

பண் – பழம்பஞ்சுரம் இராகம்: சங்கராபரணம்

சென்று தாதை யுகுத்தனன் பாலையே
சீறி யன்பு செகுத்தனன் பாலையே
வென்றி சேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீட வெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்ற மாணியை யோடின கங்கையா
னிலவ மல்கி யுதித்தன கங்கையால்
அன்று நின்னுரு வாகத் தடவியே
யால வாயர னாகத் தடவியே.

## ஆளுடைய அரசுகள்

### நான்காந் திருமுறை

### திருவாப்பாடி

பண் – திருநேரிசைக்கொல்லி இராகம்: நவரோஸ்

அண்டமா ரமரர்கோமா னாதியெம் மண்ணல் பாதங்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாப ரத்தைக்
கண்டவன் றாதைபாய்வான் காலற வெறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடியாரே.

### திருக்குறுக்கைவீரட்டம்

பண் – திருநேரிசைக் கொல்லி

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
யழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

### திருச்சாய்க்காடு

பண் – திருநேரிசைக்கொல்லி

ஆமலி பாலு நெய்யு மாட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் றாதை தாளைக்
கூர்மழு வொன்றா லோச்சக் குளிச்சடைக் கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னாரே.

### திருச்சேறை

பண்: திருநேரிசைக்கொல்லி

நிறைந்தமா மணலைக் கூப்பி நேசமோ டாவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக் கண்டு கறுத்ததன் றாதை தாளை
யெறிந்தமா ணிக்கப் போதே யெழில்கொள்சண் டீச னென்னச்
சிறந்தபே ரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

## ஐந்தாந் திருமுறை

### கோயில்

பண்: திருக்குறுந்தொகை இராகம்: மாயாமாளவகௌளை

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலா மாளக் கொடுத்தவன்
ஆணி யைச்செம்பொ னம்பலத் துண்ணின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ.

### திருக்கொண்டீச்சரம்

பண்: திருக்குறுந்தொகை

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுணு மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே.

### திருமங்கலக்குடி

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே.

## ஆறாந் திருமுறை

### திருப்பூவணம்

பண்: திருத்தாண்டகம் இராகம்: அரிகாம்போதி

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த றோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

## ஆளுடைய நம்பிகள்

## ஏழாந் திருமுறை

### திருக்கலயநல்லூர்

பண் - தக்கராகம் இராகம்: காம்போதி

இண்டைமலர் கொண்டுமண லிலிங்கம தியற்றி
யினத்தாவின் பாலாட்ட விடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவின்
மண்டபமுங் கோபுரமு மாளிகைசூ ளிகையு
மறையொலியும் விழவொலியு மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே.

### திருப்புன்கூர்

பண்: தக்கேசி இராகம்: காம்போதி

ஏத நன்னில மீரறு வேலி யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்றன் மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன் சடைமி சைமல ரருள் செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன் பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே.

### திருவீழிமிழலை

பண்: சீகாமரம் இராகம்; நாதநாமக்கிரியை

எறிந்த சண்டி யிடந்த கண்ணப்ப னேத்து பக்தர்கட் கேற்ற நல்கினீர்
செறிந்த பூம்பொழிற் றேன் றுளிவீசுந் திருமிழலை
நிறைந்த வந்தணர் நித்த நாடொறு நேசத் தாலுமைப் பூசிக்குமிடம்
அறிந்து வீழிகொண் டீ ரடியேற்கு மருளுதிரே.

## ஆளுடைய அடிகள்

### எட்டாந் திருமுறை
### திருவாசகம்

பண்: திருத்தோணோக்கம் இராகம்: மோகனம்

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் திருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

## சேந்தனார்

### ஒன்பதாந் திருமுறை
### திருவிசைப்பா — திருப்பல்லாண்டு — கோயில்

பண்: பஞ்சமம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு மண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற் கோயிலும் போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலதேவ நாயகர்

### பத்தாந் திருமுறை

திருமந்திரம் (2 - ம் தந்திரம்)

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானைந்து மாட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே.

## நக்கீரர்

### பதினோராந் திருமுறை
### கைலைபாதி காளத்திபாதி யந்தாதி

வந்தமர ரேத்து மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழு மாலை கொடுத்தார்கொல் - வந்தித்து
வாலுகுத்த வண்கயிலைக் கோனார்தம் மாமுடிமேற்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு.

## பட்டினத்துப் பிள்ளையார்

### திருவேகம்பமுடையார் திருவந்தாதி

இனியவ ரின்னா ரவரையொப் பார்பிற ரென்னவொண்ணாத்
தனியவர் தைய லுடனா மவர்தரு மம்பணித்த
முனியவ ரேது முகந்தமுக் கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி யேகம்பரே.

## நம்பியாண்டார் நம்பிகள்

### திருத்தொண்டர் திருவந்தாதி

குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் றண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழு வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே றியபால் சொரிந்தவர் சூட்டிய நன்னிதியே.

## சேக்கிழார் நாயனார்

### பன்னிரண்டாம் திருமுறை சண்டேசுரநாயனார் புராணம்

நன்றி புரியு மவர்தம்பா னன்மை மறையின் றுறைவிளங்க
என்று மறையோர் குலம்பெருக வேழு புவனங் களுமுய்ய
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயஞ் செய்தார் விசார சருமனார்.

பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்த முள்ளத்தில்
ஒருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார்.

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி யனைத்துநாம்
உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.

எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்கு மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநர்தர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளொழச்சைவ
நல்லா றோங்க நாயகமா நங்கள் பெருமான் றொழுதணைந்தார்.

வந்து மிகைசெய் தாதைதாள் மழுவாற் றுணித்த மறைச்சிறுவர்
அந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனா ராயினார்
இந்த நிலைமை யறிந்தாரா ரீறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்.

## திருஞானசம்பந்த நாயனார் புராணம்

ஞானசம் பந்தரு நாய னார்சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி யென்று நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினார்.

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்.

திருச்சிற்றம்பலம்

சைவத் தெய்வத் திருமுறைத் திரட்டு முற்றும்.

## சேது புராணம்

### கடவுள் வாழ்த்து

மனாதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனாதிதயந் தனினின்றுந் தாபித் தான்பா
றழைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
யெனாதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பினாகியரு ளடைந்தவிறற் சண்டே சன்றாள்
பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே.

— நிரம்பவழகிய தேசிகர்

" சிவனுட் பொலிகின்ற திருவருளை நேர்கண்டு
செம்மையன் புய்த்து வருவோர்
சிவபூசை கைவருஞ் சீலத்தர் சிவமான
சிவவிளைவு மன்ன வற்கே
ஆவதென ஆவின்க ணன்புய்த் தரன்கணு
மடித்தொண்டு பூண்ட நெறியே
அன்பா லுவந்தரு ளரன்பா லிருந்தருளு
மண்ணல்சண் டீசர் காக்க "

திருச்சிற்றம்பலம்

— மாவைப் பிள்ளைத்தமிழ்

உ

## யுகாந்தரங்களிற் சண்டேஸ்வரர்

1) கிருத யுகத்தில் – பிரசண்டர் – வெண்ணிறமேனி, பதினாறு கரங்கள், யானையூர்தி.

2) திரேத யுகத்தில் – விக்ராந்தசண்டர் – இரத்தச் சிவப்புநிற மேனி, எண்கரம், குதிரையூர்தி

3) துவாபர யுகத்தில் – விபுசண்டர் – பொன்னிறமேனி, நாற்கரம்,

4) கலியுகத்தில் – சண்டேசர் – கருநிறம் அல்லது சிவந்த மேனி, இருகரம்.

## ஆலய பேதத்திற் சண்டேசுவரர் நாம பேதம்

விநாயகர் ஆலயத்தில் – கும்பசண்

முருகன் ஆலயத்தில் – சுமித்தி

சிவாலயத்தில் – தெ

சூரியன் ஆலயத்தில் – தேஜஸ் ணட

மஹாத்மா அச்சகம், ஏழாலை.